Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 81

National Tamil Daily தேசிய தினசரி

(4-5-65)

விசுவாவசு சித்திரை 22 முஹர்ரம் பிறை 2 செவ்வாய்க்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 18-00 | 3-25 |




# இரு மந்திரிகள் இங்கு சனிக்கிழமை வருகை

## வீடமைப்புத் திட்டங்களையும் பல பகுதிகளையும் பார்வையிடுவர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**தொழில், வேலைவாய்ப்பு, வீடமைப்பு மந்திரி திரு. எம். எச். மொகமட், தேசியசேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகதாசா ஆகிய இருவரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார்கள். இரு மந்திரிகளும் விசேஷ விமானம்மூலம் சனிக்கிழமை காலை பலாலி விமான நிலையம் வந்தடைவார்கள்.**

விமானநிலையத்தில் உடுப்பிட்டி எம் பி திரு எம் சிவசிதம்பரம், வவுனியா எம் பி திரு சிவசிதம்பரம் ஆகியோர் மந்திரிகளை எதிர்கொண்டழைப்பார்கள். மந்திரிகளுடன் விமானத்தில் யாழ்ப்பாணம் எம் பி திரு ஜி ஜி பொன்னம்பலமும் வருவார்.

யாழ்ப்பாணத்தில் இருநாட்கள் தங்கி நிற்கும் மந்திரிகள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்யவிருக்கிறார்கள். தொழில் வீடமைப்புமந்திரி திரு. மொகமட் இங்குள்ள வீடமைப்புத்திட்டங்களைப் பார்வையிடுவார் என்றும், தேசியசேவைகள் மந்திரி சுகதாசா, பலநிலையத்தையும் மற்றும் சில முக்கிய இடங்களையும் பார்வையிடுவார் என்றும் தெரியவருகிறது.

கொழும்புத்துறை, பாஷையூர், திட்டி, சோனகதெரு, நாவாந்துறை, பண்ணை, கொட்டடி ஆகிய இடங்களுக்கு மந்திரிகள் விஜயம் செய்வார்கள்.

இரு மந்திரிகளுக்கும் நல்ல வரவேற்பளிக்க இங்குஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. மந்திரிகள் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்புவர்.

## "பாக். மிரட்டலுக்கு பணியமாட்டோம்"

### ராஜ்ய சபையில் சாஸ்திரி

புதுடில்லி, மே 3,

பாகிஸ்தான் அதிபரின் யுத்தப் போர் மிரட்டலினால் நமது நிலை சிறிதும் தளர்ந்து விடாது என்று இந்தியப்பிரதமர் சாஸ்த்திரி எச்சரிக்கை செய்துள்ளார்.

பிரதமர் சாஸ்திரி இன்று ராஜ்ய சபையில் கட்ச்-ரன் எல்லை நிலைமை குறித்தும் இந்தியாவின் நடவடிக்கைகள் பற்றியும் விபரமாக எடுத்துக் கூறுனார்.

"கட்ச்-ரன் பகுதியில் பாகிஸ்தானின் கோரிக்கை மீது சண்டை நிறுத்தம் மேற்கொண்டால் பழைய நிலையே மீண்டும் உருவாகும். பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பை இனிமேலும் எம்மால் சகிக்கமுடியாது. எமது பிரதேசத்துக்கு ஏற்பட்ட அபாயம் உண்மையானது" என்றும் திரு. சாஸ்திரி கூறினார்.

பிரிட்டனின் சமாதான யோசனை இன்னும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது, சமரசபேச்சுக்களில் முன்நிபந்தனை விதிப்பதை நாம் ஏற்க மாட்டோம் நாம் தெரிவிக்கும் யோசனையை பாகிஸ்தான் ஏற்றுக்கொள்ள மறுத்தால் இந்தியா சிறந்த முறையில் பதில் நடவடிக்கை எடுக்கும்! என்றும் அவர் கூறினார்,

**சவான் எச்சரிக்கை**

லோகசபையில் பாதுகாப்பு மந்திரி சவான் பேசுகையில்,

சண்டை நிறுத்தத்தில்அரசாங்கம் குறுக்கிடாது என்றும் கட்ச்-ரன் பகுதியை இராணுவமே வசமாக்கிக் கொண்டுள்ளதென்றும் இராணுவத்தினரிடம் குறுக்கிடுவதை அரசாங்கம் விரும்பாது என்றும் கூறினார்.

## இரத்த தானம்

### இளைஞர்களின் முன்மாதிரி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தம் இல்லாதது பற்றியும் அங்கு கட்டமையாற்றும், டாக்டர்கள் முன்மாதிரியாக நடந்துகொண்டு இரத்த தானம் செய்தது பற்றியும் முதல் முதலாக 'ஈழநாடு' பத்திரிகையில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தது வாசகநேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

இப்பொழுது இரத்தம் சேகரிக்கும் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் ஜோசெப் இவ்வியக்கத்திற்குத் தலைமைதாங்குகின்றார். இக்குழுவினர் நேர்மையாகச் சென்று பொதுஸ்தாபனங்கள் மூலம் இரத்தம் சேகரிப்பதில் ஈடுபட்டுவருகின்றனர். இவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறைக்குச் சென்று இரத்தம் சேகரித்தனர்.

வல்லை சனசமூக நிலையத்துக்கு இரத்ததான சேகரிப்பு இயக்கத்தினர் சென்றபொழுது முதலில் பலர் ஒடிஒளிக்கத் தலைப்பட்டனரெனினும் வல்வெட்டித்துறை'புளூஸ்' விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பல அங்கத்தவர்கள் துணிச்சலுடன் இரத்த தானம் செய்ய முன்வந்தனர். சனசமூகநிலையக் கமிட்டி அங்கத்தவர்கள் பலரும் இரத்த தானம் செய்யமுன்வந்தார்கள். வல்வெட்டித்துறை பட்டினசபை உபதலைவர் திரு. என். பாக்கியலிங்கம் தலைமையில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பலர் இரத்த தானம் செய்தார்கள். பல இளைஞர்கள் இதில் முன்னின்றார்கள்.

வல்வெட்டித்துறையி...

## சைக்கிளில் சென்றவர் ஸ்தலத்திலேயே மரணம்

### மருதனாமடத்தில் நிகழ்ந்த கோர விபத்து

கோண்டாவில், திங்கள்

மருதனாமடம் சந்தியில் இன்று திங்கட்கிழமை காலை ஏற்பட்ட பெட்ரோல் தாங்கி ('பவுஸர்') சைக்கிளில் விபத்தில் சைக்கிளில் சென்ற 40 வயதுள்ள கந்தையா பொன்னம்பலம் என்பவர் ஸ்தலத்திலேயே மாண்டார். அவரின் தலை பரிதாபகரமான முறையில் சிதறுண்டு கிடந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் நோக்கி சென்றுகொண்டிருந்த "பெட்ரோல்" தாங்கி மோட்டார் வண்டி மருதனாமடம் சந்தியை அடைந்தபொழுது இந்தவிபத்து ஏற்பட்டது: உடுவிலை... உரும்பராயைச் சேர்ந்த கந்தையா பொன்னம்பலம் சுன்னாகம் சந்தைக்கு சைக்கிளில் சென்றுகொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அந்த விபத்து குறித்து "பெட்ரோல் தாங்கி" சாரதி நாகலிங்கம் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவித்திருந்தார். மாஜிஸ்திரேட் விசாரணை நடைபெற்றதைத் தொடர்ந்து சாரதி 1000 ரூபா பிணையில் விடப்பட்டுள்ளார்.

இந்த விபத்தை பார்ப்பதற்கு அவசரம் அவசரமாக சைக்கிளில் ஓடிவந்த மற்றொருவர், அங்கு நின்ற காருடன் மோதி விபத்துக்குள்ளானார் என்றும் அவர் காயங்கள் எதுவுமடையவில்லை என்றும் சைக்கிளின் முன்பக்கச் சில்லு பலத்த சேதத்திற்குள்ளானதென்றும் கூறப்படுகிறது.

## வெங்காயம் கொண்டு செல்வதற்கு ஆணையிறவுத் தடையை நீக்குவதில்லை

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பால் வெங்காயத்தைக் கொண்டு செல்வதற்குள்ள ஆணையிறவுத் தடையை யாழ்ப்பாணக் குடாநாட்டுவிவசாயிகளின் நன்மையைக்கருதி நீக்குவதில்லையென்று நேற்று யாழ்ப்பாணம் கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு நெவில் ஜயவீரா தலைமையில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

வெங்காயத்தின் விலையைச் சிறிது அதிகரிப்பதன்மூலம் விவசாயிகளின் கஷ்டத்தைக் குறைக்கலாமென்றும் ஆனால் ஆணையிறவுத் தடையை நீக்குவது விவசாயிகளின் கஷ்டத்தை அதிகரிக்கவே செய்யுமென்றும் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இம்மகாநாட்டில் யாழ்ப்பாணப்பகுதி எம் பிக்கள் சிலரும் விவசாய உணவு இலாகா அதிகாரிகள் சிலரும் வடபகுதி விளைபொருள் உற்பத்தி விற்பனவுச்சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

வெங்காய உற்பத்தியாளர்களைப் பாதிக்காமலும் நாட்டின் நலனுக்கேற்ற வகையிலும் மகாநாடு ஒரு முடிவு செய்துள்ளதாக மட்டும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் திருட்டுகள் குறைவு

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணநகரில் முன்னர் நடைபெற்று வந்த திருட்டுகள் இப்பொழுது மிகவும் குறைந்துவிட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்று வார காலமாக யாழ்ப்பாண நகரில் "முழு அமைதி" நிலவுவதாகவும் எதுவும் நிகழவில்லை என்றும் அந்தவட்டாரங்கள் கூறுகின்றன. யாழ்ப்பாணம் பொலிசாரின் தீவிர ரோந்து நடவடிக்கையே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

## அறிவித்தல்

எமது ஸ்தாபனத்துடன் தொடர்பான எந்தவித அலுவல்களையும் யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதி 86-ம் இலக்கத்திலுள்ள மெஸர்ஸ் ஈகனமிக் டெவலப்மெண்ட் & ஏஜின்ஸீஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் எமது சார்பில் ஏற்று நடத்துவதற்கு எதுவித அதிகாரமும் வழங்கப்படவில்லை என்பதைப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றோம்.

ஏ. பவர் & கோ லிமிட்டெட்,
அப்பர் சதாம் வீதி,
கொழும்பு-1.

(விவசாய ரசாயன உரம் சம்பந்தப்பட்ட சகல வர்த்தகவிபாரங்கள் தேவைப்படுவோர் எம்முடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்). 166

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சத்தியம், நேர்மை இவற்றைவிட மேலான மதம் இல்லை. உண்மையான சமயமும், உண்மையான ஒழுக்கமும் பிரிக்கமுடியாதவை. மண்ணில் விதைக்கப்பட்ட வித்திற்கு நீர் எப்படியோ அதுபோல் கல்விக்கு விவேகம் அவசியமாகும்.

— யாரோ


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 22உ (4-5-65)


## யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணத்தில் பூரண வசதியுடைய தொழில்நுட்பக் கல்லூரியொன்று நிறுவப்பட வேண்டியது மிகமிக அவசியம்.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது உள்ளது கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியாகும். பூரண தொழில்நுட்பக் கல்லூரிக்கு வேண்டிய உபகரணங்களோ சாதனங்களோ இக்கல்லூரிக்கு இல்லை. இங்கு இயந்திர, மின்சார பொறியியல் மாணவர் பொதுப்பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. மூன்று வருடப் பயிற்சித்திட்டத்தை அடிப்படையில் அளிக்கப்படும் இக்கல்வி வெறும் ஏமாற்று நடவடிக்கையாகவே இருக்கிறது. இந்த மூன்றுவருடப்படிப்புடன் பரீட்சை இலாகாவால் நடத்தப்படும் கனிஷ்ட தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான பரீட்சைக்குத் தோற்ற முடியாது.

கிழக்கு மாகாணத்தில் கட்டுப்பெட்டை என்ற இடத்தில் தொழில்நுட்ப சாதனப்பயிற்சிக் கழகம் ஒன்று இருக்கிறது. இங்கு வருடத்தில் 75 அல்லது 100 மாணவர்களே பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படுகின்றனர். இக்கழகத்தில் பயிற்சி பெறுவதற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் உள்ள ஸ்தாபனங்களில் பிரவேசப் பரீட்சைகள் நடைபெறுவதுண்டு. இம்முறை இங்கு நான்கு ஸ்தானங்களில் நடைபெற்ற இப்பரீட்சைக்கு 1200 பேர் தோற்றியிருந்தனர். இதில் எத்தனை பேர் கட்டுப்பெட்டை தொழில்நுட்ப சாதன பயிற்சிக்கழகத்தில் பயிற்சிபெறும் வாய்ப்புப் பெறுவார்கள்? நூற்றுக்கு ஒரு வீதம் அல்லது இரண்டுவீதம் தான் தெரிவு செய்யப்படமுடியும். சர்வகலாசாலை விஞ்ஞானப் பயிற்சிப் படிப்பைவிட கட்டுபெட்டை தொழில்நுட்ப சாதன பயிற்சிப் படிப்பு முக்கியம் வாய்ந்ததாக மாணவர்களாலும் பெற்றோராலும் பெரிதும் மதிக்கப்படுகிறது. கட்டுப்பெட்டை தொழில்நுட்ப சாதன பயிற்சிக் கழகத்தைத் தவிர அம்பாறையிலும் தொழில்நுட்பப் பயிற்சிக் கலாசாலை ஒன்று உள்ளது. இக்கலாசாலையை விஸ்தரிக்கவும் இங்கு தொழில்நுட்ப நிபுணர்களை ஆசிரியர்களாக அமர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது!

இந்நிலையில் வடக்கு மாகாணத்திலுள்ள கல்விமான்களும் பார்லிமெண்ட் அங்கத்தவர்களும் என்ன செய்கிறார்கள்?

எமது நாட்டின் கல்வித்திட்டம் வேலையில்லாதோர் தொகையை அதிகரிப்பதாகவேயுள்ளது. எனவே தொழில்நுட்பப் பயிற்சியளிக்கும் கல்வி பெறுவதற்கு வசதி செய்ய வேண்டியது அவசியமாகும். யாழ்ப்பாணத்தில் உயர்தரக் கல்வி கற்கக்கூடிய மாணவர்கள் பலர் உள்ளனர். எனவே இங்கு பூரண வசதிகள் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியொன்று இங்கு நிறுவப்பட வேண்டியது அவசியம். இப்பொழுதுள்ள கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியை பூரண வசதியுடையதாக்குவதற்கு எங்கள் பார்லிமெண்ட் பிரதிநிதிகள் இதுவிஷயத்தில் கூடிய கவனமெடுக்க வேண்டும். நாட்டின் கைத்தொழில் வர்த்தக விருத்திக்குத் தொழில்நுட்பப்பயிற்சி அவசியம் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

## 'கமத்தொழிலில் ஈடுபடவும்'

யாழ்ப்பாணம், திங்,

"மானிப்பாய் இளம் விவசாயக் கழக கூட்டத்தில் நான் பங்குபற்றுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். சிலகாலங்களுக்கு முன்னர் இளம்விவசாயக் கழகங்கள் நல்லமுறையில் நடைபெற்று வந்தன. ஆனால் தற்பொழுது அவைகளின் உற்சாகம் குறைந்துள்ளன. மானிப்பாய் விவசாயக் கழகத்தினால் காட்டப்பட்ட உற்சாகம் வரவேற்கத்தக்கதொன்றாகும். விவசாயம் சிறந்ததொழில் அத்துடன் சுதந்திரமானதும் கூட இதனை இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டும்" என்று மானிப்பாய்பகுதி இளம் விவசாயிகள் கழக பொது கூட்டமொன்றில் பெரும்பாக விவசாய அதிகாரி திரு. எஸ். ஞானரத்தினம் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

சமூகசோதி திரு. தியாகராசா, திருவாளர்கள் எஸ். சோமகாந்தன், எம். நடராசா, ஏ. கனகராசா, ஏ. மகாதேவராசா ஆகியோரும் பேசினர்.

## "விசாரணைசெய்ய தனிப்பகுதி வேண்டும்"

யாழ்ப்பாணம், திங்கள்

"அரசாங்க உத்தியோகத்தர்கள் பொதுமக்களின் நண்பர்களாக இருக்கவேண்டும். அத்துடன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு எதிராகப் பொதுமக்களால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக தேசிய அரசாங்கம் ஒரு தனியான பகுதியை ஸ்தாபிக்கவேண்டும்" என்று சமூகசோதி திரு. சி. தியாகராசா, மானிப்பாய் சுகாதார இலாகாவைச் சேர்ந்த திரு. எஸ். நில்லைநாதன் கொழும்புக்கு இடம்மாறிச் செல்வதன் காரணமாக அவருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைக் கூட்டமொன்றில்பேசும்போது குறிப்பிட்டார்.

வலிகாமம் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் இக்கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் இ. சுப்பிரமணியம், எஸ். இராஜேந்திரம், மானிப்பாய் பட்டினசபைத் தலைவர் எஸ். அடைக்கலமுத்து ஆகியோர் திரு. தில்லைநாதனின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

## 'எப்பொழுதும் இல்லாத சூழ்நிலை இப்பொழுது ஏற்பட்டுள்ளது'

வவுனியா, திங்கள்

"நாட்டின் பல்வேறு பகுதியிலும் இரட்டைத் தட்டுகளும் ஒற்றைத் தட்டு ஸ்ரீ பஸ்களும் சேவையிலீடுபட்டு பிரயாண கஷ்டத்தை ஓரளவுக்கு வடுவித்த இந்த நேரத்திலும் கூட புளியம் பொக்கணைக்கு பல போக்குவரத்து அளிக்கப்படவில்லை. நாகதம்பிரான் கோயில் உற்சவகாலத்தில் இங்கு ஓடிவரும் பஸ் வண்டிகளில் ஒன்றைத்தானும் இப் பகுதிக்கு தினமும் ஓட விட வேண்டும்" என்று கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கு கலவெட்டித்திடல் புளியம்பொக்கணை வாசிகளால் நாகேசுவர வித்தியாலய மண்டபத்தில்வைத்து அளிக்கப்பட்ட வரவேற்புக்குத் தலைமை வகித்துப்பேசிய தலைமையாசிரியர் திரு இ. த. சுப்பிரமணியம் கூறினர்.

மேலும் திரு. சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது: எமது பகுதியில் இரணைமடுவின் மிகுதி நீர் வான்பாய்ந்து வயலுக்கு சேதம் விளைத்துவருடாவருடம் நஷ்டத்தைக் காட்டுகிறது. இதை முறைப்படி "றெகுலேட்டர்" கட்டி உதவினால் இப்பிரதேசம் பயனடைய முடியும். இது ஓர் அவசிய சேவையாக மதிக்கவேண்டும்.

வரவேற்புக்கு பண்டிதர் கா. பொ. இரத்தினம் பதிலளித்து பேசுகையில் கூறியதாவது:-

"கடந்த அரசாங்கம் இலங்கையில் அமைதியான நிலைமைக்கு குந்தகம் விளைவித்தது. தமிழ் மக்களுக்கு விசேடமாக மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்திவிட்டது. இலங்கையின் வருமானத்தில் பாதியைத் தந்தாலும் கிளிநொச்சித் தொகுதியை அபிவிருத்தி செய்யப் போதமாட்டாது ஆகவே சுயமுயற்சி முறையில் நாம் எமது கருமங்களைப்பார்க்க வேண்டும்.

பட்டம் பதவிகளையிட்டு நாம் தேசிய அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. எமது உரிமைகளை கூடுதலாக வழங்க இக் கட்சி ஒருப்பட்டது.

கிளிநொச்சியில் ஓர் மத்திய நெசவு நிலயத்தை விரைவில் நிறுவி தொழிற்பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது' கிளிநொச்சி கிராம சபை மூன்று கிராமசபைகளாக விஸ்தரித்து போக்குவரத்தையும் நஸ்தாக்கலையும் இவை மூலம் கவனிக்கலாம்' இளம் வாலிபருக்குநவீன முறையில் கமச்செய்கைப்பயிற்சி பாடசாலை ஒன்றும் இப்பகுதியில் அவசியம்.

நாம் தென்பகுதிமக்களை எமது சாத்வீக முறைகளினால் வென்று வருகிறோம். இப்போதுள்ள சூழ்நிலை இலங்கையில் எப்பவும் இருந்ததில்லை. இன்றைய அரசாங்கம் நீதியைச்செய்ய முன்வந்துள்ளது' ஆகவே ஆதரவைக்காட்டுகின்றோம். நாம் பதவிகளைக்கண்டு ஏமாறமாட்டோம். எமது இலட்சியங்களை கைவிடமாட்டோம். ஆகவே எங்களையும் எமது கட்சியையும் நீங்கள் என்றும் நம்பலாம்.

## "காலஞ்சென்றவர் கதைக்க முடியாது நிலத்தில் கிடந்தார்"

### பருத்தித்துறை கொலைவழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்

"சம்பவம் நடந்த தினம் நான் வீட்டில் நித்திரை செய்து கொண்டிருந்தேன். எனது மகன் 'ஐயோ' என்று கத்திக் கொண்டு ஓடிவந்து; குஞ்சியப்புவை துரையனும் செல்லத்தம்பியும் அடித்துவிட்டார்கள் என்று கூறினன். நான் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றபொழுது காலஞ் சென்றவர் நிலத்தில் கிடந்தார்."

பருத்தித்துறை கொலை வழக்கு நேற்றுக்காலை நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்சியமளித்த வேலன் வல்லி மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் 28-ம் திகதி வேலன் சின்னத்தம்பி என்பவரை, கே. துரையன், எஸ். செல்லக்கண்டு ஆகியோர் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். கண்ணுத்துரை திரு. வி. கணபதிப்பிள்ளையின் ஆலாசனையுடன் ஆஜரானர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் திரு. ஆர். கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார்.

வேலன் வல்லி சாட்சியமளித்தபோது மேலும் கூறியதாவது:– காலஞ் சென்றவர் எனது சகோதரன் பிரேத பரிசோதனையின் போது நான் அவரை அடையாளம் காட்டினேன். சம்பவம் நடந்ததினம் எனக்கு ஞாபகமிருக்கிறது, நான் அன்றிரவு 8 மணிக்கு நித்திரைக்கு போனேன். எனது மகன் ஓடிவந்து நடந்தவற்றை கூறினன். நான் சம்பவம் நடந்த இடத்துக்கு சென்றபோது காலஞ் சென்றவர் நிலத்தில் கிடந்தார். அவரது கால்களில் காயமிருந்தது அவர் பேச முடியாமலிருந்தார். நான் கார் ஒன்று பிடித்து வந்து அவரை பருத்தித்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன். சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஆஸ்பத்திரி நான்கு மைல்களுக்கு அப்பால் உள்ளது. நான் ஆஸ்பத்திரியில் 2 மணித்தியாலம் வரை நின்றுவிட்டு வீட்டிற்கு சென்றேன். மறுநாள் காலை ஆஸ்பத்திரிக்கு சென்றேன். காயமடைந்தவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்ல வேண்டுமென்று டாக்டர் கூறினர். பருத்தித்துறை ஆஸ்பத்திரியிலுள்ள 'அம்புலன்ஸ்' பழுதடைந்துவிட்டதால் வேறு 'அம்புலன்ஸ்' வருமென்று டாக்டர் கூறினர். ஒரு மணித்தியாலத்தின் பின் 'அம்புலன்ஸ்' வந்தது. நானும், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு சென்றேன். நான் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் இருந்தபோது, காயமடைந்தவரை சத்திர சிகிச்சை செய்யவேண்டுமென்று டாக்டர் கூறினர்.

சத்திரசிகிச்சை செய்வதற்கு இரத்தம் அவசியம் தேவையென்றும், யாரையாவது இரத்தம் கொடுக்க கூட்டிவரும்படி டாக்டர் கூறினர். நான் யாழ்ப்பாணத்திலிருந்து கரவெட்டிக்குச்சென்று 2 பேரை இரத்தம் கொடுப்பதற்கு யாழ்ப்பாணத்திற்கு கூட்டிவந்தேன் அதன்பின் சத்திர சிகிச்சை நடைபெற்றது.

குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:

நானும் காலஞ்சென்றவரும், இரு சகோதரிகளை மணந்தோம், காலஞ்சென்றவர் எனது வீட்டில்தான் வளர்ந்தார்.

நீதியரசர்: காலஞ்சென்றவர் வேலைபார்க்கும் இடத்தில் எவ்வளவு காலமிருந்தார்?–நான்கு வருடம்.

வழ: சம்பவம் நடந்த இடத்தைச்சுற்றி வீடுகள் இருக்கிறதா?–ஆம்.

டாக்டர் என். ராஜையா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சிவஞானசுந்தரம், சப்இன்ஸ்பெக்டர் ரத்நாயக்கா ஆகியோர் சாட்சியமளித்தார்கள். மேல்விசாரணை இன்றுகாலை தொடர்ந்து நடைபெறும்.

## ஆராய்ச்சிக்காக வெளிநாடு பயணம்

கொழும்பு, திங்கள்

கொழும்பு யானைக்கால் நோய்த் தடுப்புப் பகுதியைச் சேர்ந்த சிரேஷ்ட மருத்துவ ஆய்வுகூட ஆராய்ச்சியாளரான திரு. க. தருமராசா, உலக சுகாதார சம்மேளனத்தின் (டபிள்யு. எச். ஓ.) சர்வதேசசிவில்சேவையால் நியமிக்கப்பட்ட பணியை நிறைவேற்றும்பொருட்டுவிரைவில் இலங்கையை விட்டுச்செல்வார். மாலைதீவுகளைச் சேர்ந்த மலே என்னும் இடத்திலுள்ள பொதுசன சுகாதார நிர்வாகத் திட்டத்திற்குப் பிரதான மருத்துவ ஆய்வு கூட ஆராய்ச்சியாளராக இவர் செல்கிறார்.

திரு. தருமராசா மருத்துவ ஆய்வுகூட ஆராய்ச்சியாளராக 1939-ல் சுகாதாரப் பகுதியில் சேர்ந்த காலம்தொட்டு, பல பொறுப்புவாய்ந்த ஸ்தானங்களை வகித்துள்ளார், பூச்சிகளாற் பரப்பப்படும் நோய்களை பற்றிய ஆராய்ச்சியிலும் குருநாகல் மலேரியாத் தடுப்பு இயக்கத்திலும் இவர் செலுத்திய சேவைகளை பேராசிரியர்கள் செள, கேர்ஷோ போன்ற உலகப் புகழ்பெற்ற உலகசுகாதார சம்மேளன உத்தியோகத்தினரின் பாராட்டுதலைப் பெற்றது. குருநாகலில் சுற்றுச் சுகாதார திட்டம் அமுல் நடத்தப்படுவதற்கு முன்னோடியாக ஆராய்ச்சி நடத்தும்படி திரு. தருமராசா முன்னள் சுகாதாரத்துறை அதிபர் டாக்டர் டபிள்யு. ஏ. கருணரத்தினவாற் பணிக்கப்பட்டார்.

மானிப்பாயைச் சேர்ந்தவரான திரு தருமராசா மானிப்பாய் இந்துக் கல்லூரியினதும் யாழ்ப்பாணக் கல்லூரியினதும் பழைய மாணவராவர்.

## "பல்கலைக்கழகத்தை நிறுவுக"

### கலாமன்ற கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை கதிரவேற்பிள்ளை கலாமன்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

நீட்ராம் கமிஷனர் சிபார்சு செய்ததுபோன்று தமிழ்மாணவர்களுக்கு ஒரு சர்வகலாசாலையை ஸ்தாபிக்கும்படி இம்மன்றம் கல்விமந்திரியை கேட்டுக் கொள்கிறது.

திருநெல்வேலியில் இருந்த சைவ ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலையை மீண்டும்திறந்து பழையபடி. தொடர்ந்துசைவ சமயத்திற்கும்-கலாசாரத்திற்கும் தொண்டுபுரியும் வண்ணம் கல்விமந்திரியை இம்மன்றம் கேட்டுக் கொள்கிறது.

## நாவலர் மன்றம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் நாவலர் மன்றம் கிரிக்கெட் கோஷ்டிக்கும், சுழிபுரம் கல்லைவழவு கிரிக்கெட் கோஷ்டியினருக்கும் சிநேகித பூர்வமாக பறுளை வீதியிலுள்ள கனவராயர்குளத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் நாவலர் மன்ற கிரிக்கெட் கோஷ்டியினர் அமோகவெற்றியீட்டினர். செல்வன் க. பாலச்சந்திரன் நாவலர் மன்றக் கோஷ்டியின் காப்டனாகவும் செல்வன் அ. நித்தியானந்தன் கல்லைவழவு கோஷ்டியின் காப்டனாகவும் நின்று ஆட்டத்தைச்சிறப்பித்தார்கள்.

### ஸ்கோர் விபரம்

நாவலர்மன்றம் 1-ம் இனிங்ஸ் 46, 2-ம் இன்னிங்ஸ் 70 (5 விக்கட் நஷ்டத்திற்கு)

கல்லைவழவு- 1-ம் இனிங்ஸ் 64, 2-ம் இனிங்ஸ் 26.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# டொமினிக்கன் குடியரசில் 9,500 அமெரிக்க துருப்புகள்

## நிலைமையை ஆராய ஐ. நா. கூடியது

சாந்தோ டொமிங்கோ, மே 3

டொமினிக்கன் குடியரசில் மேலும் 2,600 அமெரிக்கத் துருப்புகள் வந்திறங்கியதைத் தொடர்ந்து இங்குள்ள அமெரிக்கத் துருப்புகளின் தொகை 9,500 ஆக அதிகரித்துள்ளது.

டொமினிக்கன் குடியரசில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து அங்குள்ள அமெரிக்கர்களுக்கு பாதுகாப்பளிக்கவே அமெரிக்க துருப்புகள் அனுப்பப்படுவதாக அமெரிக்க அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இருந்தபொழுதிலும் அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை லத்தீன் அமெரிக்க நாடுகள் உட்பட பல நாடுகள் கண்டித்துள்ளன.

இங்கு ஒரு இடத்தில் அமெரிக்கத் துருப்புகளுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் 4 அமெரிக்க துருப்புகள் மாண்டனர். 22 பேர் காயமடைந்தனர்.

டொமினிக்கன் குடியரசின் தலைநகரமான சாந்தோ டொமிங்கோவில் அமைதி நிலவுவதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

**ஐ. நா. கூடுகிறது**

டொமினிக்கன் குடியரசு நெருக்கடியை விவாதிக்கும் பொருட்டு இன்று ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்துசபை கூடியது. சுவிற்சர்லாந்தில் விஜயம் செய்த ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட் தமது விஜயத்தை ரத்துச் செய்துவிட்டு நியூயோர்க் திரும்பியுள்ளார்.

# சுகர்ணோ முடிவு ஏமாற்றம் கொடுக்கிறது

## மலேசிய மந்திரி வருத்தம்


கோலாலம்பூர், மே 3

மலேசியா பிரச்னை குறித்து மலேசியப் பிரதமர் துங்கு அப்துல்ரஹ்மானுடன் பேச்சுகள் நடத்த டோக்கியோ செல்ல மாட்டேன் என்று இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோ அறிவித்திருப்பது மலேசியாவுக்கு பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது என்று மலேசியா கல்வி மந்திரி இங்கு கூறினார்.

"இம்மாதத்தில் இரு தலைவர்களும் டோக்கியோவில் சந்தித்து இப்பிரச்னைக்கு தீர்வு காணுவார்கள் என்று எதிர்பார்த்தோம். அதிபர் சுகர்ணோவின் அறிவிப்பு எமது நம்பிக்கையைத் தகர்த்துவிட்டது" என்றும் அவர் கூறினார்.

இம்மாதத்தில் வசதி ஏற்படாவிட்டால் அடுத்த மாதத்திலாவது சுகர்ணோவைச் சந்தித்துப் பேச்சுகளை நடத்த துங்கு விரும்புவதாக அவர் கூறினார்.

## புதிய வழக்கறிஞர்



அல்லைப் பிட்டியைச் சேர்ந்தவரான திரு. அருளம்பலம் கெங்காதரன் இம்மாதம் நீதியரசர் திரு. ஏ. எல். எஸ். சிறிமானே முன்னிலையில் புறக்டராக விசுவாசப் பிரமாணம் செய்து கொண்டார்.

அல்லைப்பிட்டி கிராமத் தலைமைக்காரராகக் கடமையாற்றிய காலஞ்சென்ற திரு ஏ. அருளம்பலத்தின் புதல்வராகிய இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவராவர்.

திரு. கெங்காதரன் 1956-ம் ஆண்டில் வருமானவரி இலாகாவில் எழுதுவினைஞராகச் சேர்ந்து பின்னர் உத்தியோக மொழிச் சட்டம் காரணமாக பதவியிலிருந்து விலகி சட்டக் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்று கடந்த மார்கழி மாதத்தில் புறக்டர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

# அபூர்வ ராகங்களைச் சிருஷ்டித்த சங்கீத கலாநிதி

## ஜி. என். பி. மறைவுக்கு இசை உலகம் அஞ்சலி

பிரபலகர்நாடக சங்கீத வித்வான் சங்கீத கலாநிதி ஸ்ரீ. ஜி. என். பாலசுப்பிரமணியம் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து திருவனந்தபுரத்தில் காலமானார்.

ஸ்ரீ. ஜி. என். பி. இருதய நோய்க்காக சென்ற இரண்டு வாரகாலமாக திருவனந்தபுரம் ஜில்லா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தார். அங்கு தமது இல்லத்தில் அவர் காலமானார்.

ஜி. என். பி. காலமான செய்திகேட்டு சங்கீத உலகம் துக்கத்தில் ஆழ்ந்தது.

காலஞ்சென்ற ஸ்ரீ. ஜி. என். பாலசுப்ரமணியத்துக்கு வயது 54. பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்றவர். அவர் பல ஸ்தாபனங்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு கர்நாடக சங்கீதத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தார். 1964 ஜனவரியில் சுவாதி திருநாள் சங்கீத கல்லூரிமுதல்வர் பதவியை ஏற்றார். அவர் 100 கீர்த்தனைகளுக்கு மேல் இயற்றியிருக்கிறார். "கான பாஸ்கர" என்ற பெயரில் அவை புத்தகமாக பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவருக்கு மனைவி, ஐந்துபிள்ளைகள், ஐந்து பெண்கள் இருக்கிறார்கள்.

**ஈ. கிருஷ்ணையர்**

சென்னை ராஜ்ய சங்கீத நாடக சங்கக்காரியதரிசி ஸ்ரீ ஈ. கிருஷ்ணய்யர் இந்தத் தலைமுறையில் தலைசிறந்த வித்துவான்களில் ஒருவர் ஜி. என். பி. அவருக்கு இசை உலகில் ரொம்ப மதிப்பு உண்டு. அவர் சிறந்த பாடகர் என்பது மட்டுமின்றி கர்நாடக சங்கீத சாஸ்திரத்தில் நல்ல ஆராய்ச்சியும் செய்வர். சில வருஷங்களுக்கு சென்னை வித்வத் சபை மகாநாட்டுக்குத் தலைமை வகித்து, சங்கீத கலாநிதி பட்டம்பெற்றார். ஸ்ரீ ஜி என் பிக்கு நிறைய சிஷ்யர்கள் உண்டு. "ஜி என் பி பாணி" என்று தனக்கென ஒரு தனி பாணியை வகுத்துக்கொண்டவர்" என்று கூறினார்.

**முசிரியின் துக்கம்**

ஸ்ரீ ஜி என் பாலசுப்பிரமணியம் தானாக உழைத்து முன்னுக்கு வந்தவர் என்று ஸ்ரீ முசிரி சுப்பிரமண்யஐயர் கூறினார். அவருக்கு ஏராளமான கீர்த்தனைகள் தெரியும். பல அருமையான கீர்த்தனைகளை இயற்ற அவருடைய படிப்பும் இயற்கையாக அமைந்த திறமையும் உதவின. அவருடைய மறைவால் கர்நாடக சங்கீதத்துக்கு பெரு நஷ்டம் என்றும் அவர் சொன்னார்.

**செம்மங்குடியின் வருத்தம்**

ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் சொன்னதாவது:- ஸ்ரீ ஜி என் பாலசுப்பிரமணியத்தின் மறைவைக் கேட்டு திடுக்கிட்டுப் போனேன். அதனால் கலை உலகிற்கு எவ்வளவு நஷ்டம் என்பது என்னால் கூறமுடியவில்லை. அவர் கலை அறிவாளிகளில் ஒருவர். ஆராய்ச்சி மனோபாவம் உள்ளவர். அனேக அபூர்வ ராகங்கள், புதுகீர்த்தனைகளை கொண்டு வந்த பெருமை அவருக்கு உண்டு. அவர் மறைவு என்னால் தாங்கமுடியவில்லை.

**டி. கே. பட்டம்மாள்**

ஸ்ரீமதி டி கே பட்டம்மாள் கூறியதாவது:- ஸ்ரீ ஜி என் பி மறைவு சங்கீத உலகம் பூராவையும் திடுக்கிடவைக்கும் செய்தியாகும். அவருடைய 'பாணி' இன்று சங்கீதத்துறையில் மிகப் பிரபலமாக இருக்கிறது. அவருக்கு ஏராளமான சிஷ்யர்கள் உண்டு. கர்நாடக சங்கீத உலகில் 'பிரிகி' என்ற சொல்வழக்கு ஏற்படுவதற்கே ஜி என் பி தான் காரணமாவார். அவர் சங்கீத சாஸ்திரத்தில் நிறைய ஆராய்ச்சி செய்திருக்கிறார். அபூர்வ ராகங்கள் பல கண்டு பிடித்து உயர்ந்த முறையில் அவற்றை வழங்கினார். அவருடைய மறைவினால் சங்கீத உலகிற்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் ஈடுசெய்ய முடியாதது.

**மதுரை மணிஐயர்**

ஜி என் பி யைத தமக்கு 35 வருஷமாகத் தெரியுமென்றும் இருவரும் திருவல்லிக்கேணியில் அவரது வீட்டில் சேர்ந்து சாதகம்செய்து வந்ததாகவும் மதுரை மணிஐயர் கூறுகிறார்; ஜி என் பிக்கு சங்கீதத்திலிடம் ஆழ்ந்த பற்றுண்டு. அவர் தம்முடைய கீர்த்தன ஞானத்தைப் பெரிதும் போஷித்துக்கொண்டிருந்தார் என்றும் ஸ்ரீ மணி கூறுகிறார். துரித காலத்தில் பாடுவதில் அவருக்கு இருந்த திறமையை சிறப்பித்துக் கூறினார்.

**எம். எல். வி.**

ஜி என் பி யின் சிஷ்யைகளில் பிரதானமானவரான சிஷ்யைகளில் பிரதானமானவரான ஸ்ரீமதி எம் எல் வசந்தகுமாரி, லட்சியமும் லட்சணமும் அவருடைய சங்கீதத்தில் சிறப்புற ஒருசேர அமைந்திருந்தது என்றார்.

ஜி என் பி யின் மறைவு தமக்கு சொந்த துக்கமாகும் என்றார். திறமைசாலிகளைக் கண்டறிந்து வெளிப்படுத்துவதில் அவரிடம் ஒரு லட்சியவேகம் காணப்பட்டது என்றார்.

சிரமமான கீர்த்தனங்களை எளிதில் கற்றுணரும் வகையில் சொல்லித்தரும் சாமர்த்தியம் அவருக்கு கைவந்திருந்தது என்றார். ஹிந்துஸ்தானி, மேல்நாட்டு சங்கீதங்களிலும் அவருக்கு ஈடுபாடு உண்டென்று அவர் குறிப்பிட்டார்.

## பாக்: உளவாளிகள் கட்ச்சில் கைது

புதுடில்லி, மே. 3

கட்ச்-ரன் பகுதியில் உளவுவேலை செய்த 3 பாகிஸ்தானியர்களை இந்தியத் துருப்புகள் நேற்று கைதுசெய்ததாக இன்று பகல் இங்கு அறிவிக்கப்பட்டது.

## 160 வியட்காங் கொரில்லாக்கள் பலி

சைகோன், மே 3

தென்வியட்நாமிலுள்ள வியட்காங் கொரில்லாக்களின் நிலைகள்மீது அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதல்களில் 160 வியட்காங் கொரில்லாக்கள் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

## நெருக்கடிப் பேச்சுகள்

ராவல்பிண்டி, மே 3

பாகிஸ்தானுக்கான பிரிட்டிஷ் ஹைகமிஷனர் நேற்று பாகிஸ்தான் அதிபர் அயூப்கானைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினார். நெருக்கடி நிலவும் கட்ச்-ரன் பகுதி பற்றி இவர்கள் பேச்சுகள் நடத்தியதாகக் கூறப்படுகிறது. அதிபர் அயூப்கான் இன்று கராச்சி போய்ச் சேர்ந்தார்.

## நில அதிர்ச்சிக்கு 7 பேர் பலி

டோக்கியோ, மே 3

மத்திய ஜப்பானில் ஏற்பட்ட நில அதிர்ச்சி காரணமாக மலையேறும் கோஷ்டியைச் சேர்ந்த 7 பேர் பலியானார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பேய் மழையினால் வீடுகள் சேதம்

கொஸ்லாந்தை, திங்கள்

கொஸ்லாந்தை வட்டாரத்தில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் பேய்மழையின் காரணமாக கொஸ்லாந்தை ஓயாவிலும் லேமாஸ் ஓயாவிலும் வெள்ளப்பெருக்கெடுத்துள்ளது. இதன் காரணமாக ஆற்றின் பக்கத்திலுள்ள பல வீடுகள் அடையாளம்காண முடியாத அளவில் சேதமடைந்துள்ளன.

கொஸ்லாந்தை அப்புத்தளையை இணைக்கும் பிரதான வழியை, மலைகள் நிலைபெயர்ந்து வழியில் விழுந்ததால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

## கட்டிட வேலைகள் நிறுத்தப்பட்டன

கல்முனை, திங்கள்

தேர்தல் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்முனை ஆஸ்பத்திரியின் கட்டிடவேலைகள் சில வாரங்களாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. ஐந்தரை லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டிருக்க பிரசவவிடுதியும் சத்திரசிகிச்சை நிலையமும் அரைவாசியில் ஸ்தம்பித்துவிட்டது.

கட்டிடவேலையைக் கைவிடாமல் தொடர்ந்து செய்யுமாறு கேட்டு சுகாதார மந்திரியைப் [illegible] விருத்திச் சங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## திருடரின் கைவரிசை பற்கள் இரண்டு பறந்தன!

பருத்தித்துறை, திங்கள்

புலோலி தெற்கில் மீண்டும் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

பருத்தித்துறை-கொடிகாமம் ரஸ்தாவில் உள்ள வீடொன்றில் ஒருவரும் இல்லாதசமயம் கதவை உடைத்து உட்சென்று விலையுயர்ந்த சேலைகளும், வெள்ளி, வெண்கலப் பாத்திரங்களும் திருடப்பட்டுவிட்டதாகப் புகார் செய்யப்பட்டிருக்கின்றது.

புலோலி தெற்கில் உள்ள பிறிதோர் வீட்டில் திருடர்கள் சிலர் வெளியில் நித்திரை செய்த பெண்ணின் வாயைப் பொத்திப் பிடித்துக்கொண்டு அங்கிருந்த சேலை, சட்டை முதலான உடைகளை திருடிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. வாயைப் பலமாக அமுக்கிப் பிடித்ததால் அம்பெண்ணின் இருபற்கள் விழுந்துவிட்டதாகவும் அறியப்படுகிறது.

## வான் விபத்தில் சிறுமி மரணம்

கொஸ்லாந்தை, திங்கள்

பலாங்கொடையைச் சேர்ந்த ஒரு வான் ஒன்பது பிரயாணிகளுடன் கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது அறுபதடி பள்ளத்தில் பாய்ந்து மிகவும் சேதத்துக்குள்ளாகியது.

பத்து வயதுச் சிறுமி ஸ்தலத்திலேயே மரணமானார். மற்றவர்கள் படுகாயங்களுடன் பலாங்கொடை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். அவர்கள் மிகவும் மோசமான நிலையிலிருப்பதாக வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார். பலாங்கொடை பொலிஸார் விபத்து நடந்த காரணத்தை மேலும் புலன் விசாரணைசெய்துவருகின்றனர்.

## நியமனங்கள்

பருத்தித்துறை, திங்கள்

கட்டைவேலிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாஜத்தை நடாத்தும் சபைக்கு கூட்டுறவு உதவிஆணையாளரால் பின்வருவோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்-திரு. யே. டி. ஆர்னல்ட், உபதலைவர்-வித்துவான் கே. நடராசா, செயலாளர்-திரு. செ. ஐயாத்துரை.

இச்சமாஜம் தீ விபத்துக்கும் கொள்ளைக்கும் இலக்காகிய பின் நிர்வாகம் கலைக்கப்பட்டு கூட்டுறவு [illegible] ஆணையாளரின்நேரடி நிர்வாகத்தில் இயங்கிவருவது குறிப்பிடக் கூடியதாகும்.

## காங்கிரஸ் கிளை கண்டனம்

மீசாலை, திங்கள்

"தனிச்சிங்களச் சட்டத்தை ஏற்றுக்கொள்வதாக செனட் சபையில் மந்திரி திருச்செல்வம் கூறியது, தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த முடிவல்ல என்பதை அரசாங்கம் அறிந்து கொள்ள வேண்டும். இலங்கையிலுள்ள எந்தத் தமிழனும், தனிச்சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள மாட்டான்.

சாவகச்சேரி தமிழ்காங்கிரஸ் கிளை கூட்டம் நேற்று மாலை சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் கிளை காரியாலயத்தில் நடைபெற்றபோது இக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய பாரிஸ்டர் எம். சிவானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

தனிச் சிங்களத்தை ஏற்றுக்கொள்வதாக மந்திரி திருச்செல்வம், செனட் சபையில் கூறியதற்கு இக்கூட்டத்தில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை எல்லைகளுக்குள் உள்ள காணிகளின் வரி அதிகரித்திருப்பதை யிட்டு பலத்த ஆட்சேபம் தெரிவிக்கப் பட்டது.

## கும்பாபிஷேகம்

வேலணை, திங்கள்

வேலணை கிழக்கு பெருங்குளம் முத்துமாரியம்மன் கோவிலில் கடந்த மாதம் தொடக்கம் நடைபெற்று வந்த கும்பாபிஷேகத்தின் கடைசி 48-வது நாள், எதிர்வரும் வியாழக்கிழமை முடிவடைகிறது. அடுத்து வெள்ளிக்கிழமை பகல் விசேஷ அபிஷேக ஆராதனையும், அன்னதானமும் வழங்கப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் மலர்



# சந்திரனில் மண் ஆராய்ச்சி!

## சந்திரனைத் தரிசிக்கும் திட்டம் கைகூடாதாம்

— மகான் —

இரண்டரை லட்சம் தூரத்தில் சந்திரன் இருக்கிறது அதாவது பூமத்திய ரேகை வழியாக பத்துத் தடவைகள் உலகை வலம்வரும் தூரமே சந்திரனுக்குச் செல்லும் தொலைவு! அவ்வளவு தூரத்தில் இருக்கும் சந்திரனை அடைய மனிதன் துடித்துக்கொண்டிருக்கிறான், அதற்கான பாதையை விஞ்ஞானிகள் அமைத்துக்கொண்டிருக்கின்றனர்.

சந்திரனுக்குப் போவது எப்படி என்பதை துருவி ஆராய்ந்து கொண்டிருக்கும் விஞ்ஞானிகள், சந்திரன் எப்படி தோன்றியது? அது எதனால் ஆனது? அங்கு உயிர்வாழ்க்கை உண்டா? சந்திரனைச் சுற்றி வாயு மண்டலம் உண்டா என்ற கேள்விகளுக்கும் விடை காண்பதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

1966-ம் ஆண்டில், விண்வெளி வீரர்களில்லாத பல விண்வெளிக் கப்பல்களை அமெரிக்கா தொடர்ச்சியாக அனுப்பவிருக்கிறது, இத்திட்டத்தை ரஷ்யா மிஞ்சிவிட்டாலும் மிஞ்சி விடலாம், அதில் வியப்பில்லை, ஆனால் நோக்கங்கள் அநேகமாக ஒன்றாக இருக்குமென்றே சொல்லப்படுகிறது.

மெதுவாக சந்திரனில் இறங்கி, அதன் மேல் பரப்பு அமைப்புப் படங்களை டெலிவிஷன் மூலம் பூமிக்கு அனுப்புதல்

சந்திரனிலுள்ள மண்ணின் மாதிரிகளை ஆராய்ந்து, முடிவுகளை வானொலி மூலமாக பூமிக்கு அனுப்புதல். இந்த மண் ஆராட்சி பெரிதும் பயன்தருமென்று விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

மேற்கண்ட நோக்கங்களே, அந்த விண்வெளிக்கப்பல்களின் திட்டங்களாக விருக்கும்,

சந்திரனைச் சுற்றி வாயு மண்டலம் எதுவும் இல்லை, அங்கு தட்ப வெப்பங்களில் விரிவான வேற்றுமைகள் இருக்கிறது, பகலில் மேற்பரப்பில் வெப்பம் 220 டிகிரி ஃபாரன் ஹீட்வரை உயர்கிறது. இரவில் —250 டிகிரி வரை குளிர்ந்து விடுகிறது! இதனால்சந்திரனில் கடும் வெப்பமும கடும் குளிரும் இருக்கும். சந்திரனில் உயிர் வாழ்க்கை இருக்குமென்று திட்டமாகக் கூறும் விஞ்ஞானிகள் அது காமறியாத ஒருவகையாக இருக்குமென்று சொல்கிறார்கள், இதெல்லாவற்றையும் இன்னும் ஓரிரு வருடங்களில் திட்டமாக அறிந்து விடுவார்கள். இதன் பலன் 1970-க்குள் மனிதன் சந்திரனில் காலடி வைத்துவிடுவான்,

### திட்டம் கைகூடாதாம்!

சந்திரனில் மனிதனை இறக்கி திரும்பக் கொண்டுவரும் லட்சியம் கைகூடாமற் போய் விடக்கூடும் என்று நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி டாக்டர் ஹெராலட்யுரேலி தெரிவித்தார்.

சந்திரனில் மனிதனை இறக்குவது சாத்தியமாகும் பட்சத்தில். செவ்வாய்க் கிரகத்திலும் இறக்குவது சாத்தியமாகும் என்றார். ஏனெனில் அங்குபுழுதிப் புயல்களுக்குப்பின்னர் அடிக்கடி பசுமை காணப்படுவது, அங்கு உயிரினம் இருப்பதைக் குறிப்பதாயுள்ளது என்றார்.

சந்திரனிலிருந்தோ அல்லது உப கிரகங்களிலிருந்தோ பூமி மீது குண்டு வீசுவது எளிதல்ல: குறிபார்த்து வீசுவதுமுடியாது என்ற கருத்தையும் அவர் வெளியிட்டார். வேவுப் பணிகளுக்காக மட்டுமே உப கிரகங்கள் ராணுவ ரீதியில் பயன் படலாம் என்றார்.

### விண்வெளி வீரர்கள் பட்டியல்

சந்திரனைப் பற்றி அறியும் நாம், இது காலமும் இந்த முயற்சியில் ஈடுபட்டவர்களை மறக்க முடியாது. உயிரையும் பொருட்படுத்தாது ஆராய்சி வேலையில் ஈடுபட்ட விண்வெளி வீரர்களின் பட்டியலை இங்கு ஒரு தரம் ஆராய்வோம்.

இதுவரை விண்வெளியில் பறந்திருக்கும் வீரர்களின் முழு விபரம் வருமாறு:

யூரிககாரின் (ரஷ்)1961- ஏப். -12-1-சுற்று.

ஜெர்மன் டிட்டோ (ரஷ்) 1961 ஆக.-6-17-சுற்றுக்கள்.

ஜான் கிளேன் (அமெ) 1962 பிப். 20-3-சுற்றுக்கள்,

மால் கோம்ஸ்காட் (அமெ) 1962-மே-24-சுற்றுக்கள்- 3,

நிகோலாயேவ் (ரஷ்) -1962-ஆக-11-48-சுற்றுக்கள்.

போபோவிச் (ரஷ்)-1662-ஆக-12-48-சுற்றுக்கள்.

வால்டர் ஷீரா (அமெ)-1652-அக்,3- 6-சுற்றுக்கள்,

கார்டன் கூப்பர் (அமெ) [illegible]

வாலரி பைகோவ்ஸ்கி (ரஷ்) 1963 ஜூன் 14-81 சுற்றுக்கள்.

வாலண்டினா டெரஸ்கோவா (ரஷ்) 1963 ஜுன் 16-48 சுற்றுக்கள்.

விலாடிமர் கொமரோவ், பெக்டியோவ், கொமரோவ் (மூவர்) 1964 அக் 12-16 சுற்றுக்கள்,

முதல் விண்வெளி வீரர் ககாரின், முதல் அமெரிக்கர் க்லெனன், முதல் பெண் டெரஸ்கோவா.

முதன் முதலில் மூவர் ஒரே கப்பலில் சென்றது 1964 அக்டோபரில் தான்.

விண்வெளி வீராங்கனை டெரஸ்கோவா 1963 நவம்பரில் விண்வெளி வீரர் நிகோலாயேவை மணந்தார்.

அறிவுச் செல்வம்

# உரங்களின் உபயோகம்

— பொ. கனகநாயகம் —

இருவாட்டிக்களித் தரையில் அல்லது இருவாட்டி மணல் தரையில் மக்கி இருப்பின் அப்பகுதிகள் மக்கித் தரைகள் எனப்படும். இத்தரை பண்படுத்த உகந்த நிலமல்ல. நீர்த்தன்மை சற்றேனும் இல்லை. இதனால் இதை கொதித்தரை என்று சொல்வர். இந்த நிலத்தில் நீர் நிற்கமாட்டாது. ஆனால் பல விருட்சங்களும், மரங்களும் வளரும்.

### மட்குப் பசளைத் தரை

இத்தரை குளத்து மண் தரையை ஒக்கும் நீர்த்தன்மையுடன் சதுப்பு நிலமாக இருக்கும். இம்மண் அதிகமாக மலையரப் பகுதிகளில் காணலாம். இலை, குழைகள், உக்கி அழிந்த அழுக்கான வண்டல் சேறாக இருக்கும் பசளை அதிகம் இதில் உண்டு. நீர்த் தன்மையைப் போக்கி (வடிகால் அமைத்து) பயிர்ச் செய்கை அனுகூலத்தைக் கையாளலாம்.

### உவர் நிலம்

அதிகமாக இத்தரைகள் கடற்கரையை அடுத்தப் பகுதிகளில் காணப்படும். இரசாயனச் சிதைவால் உலோகப் பொருள்களும், தாதுப்பொருள்களும் கரைந்த உப்பானது நீரில் கலந்து கீழே செல்லுகின்றது. பின்னர் மழை நீருடனும் அடிக்குச் செல்லுகின்றன. இந்த உப்பு நீர் சூரிய வெப்பத்தினால் மேல் வந்து, ஆவியாகி உப்பு படாகிறது. இவ்வாறு பல வருடங்கள் நடைபெறுகின்றன. இங்ஙனம் அத்தரை உடபுத்தரையாக மாறும்போது, உவர் தரை என்று சொல்வர்.

உவர் மண்ணில் முக்கிய பொருள்கள் சோடியம் கார்பனேட்டு, சோடியம் குளோரைட் (கறியுப்பு) என்பன. சோடியம் கார்பனேட்டில் நிலக்கரைசல் அடர்வாகிறது. இளம் வேர்களை அழித்துவிடுகிறது. நில அமைப்புத் தன்மையைப் பழுதாக்கிவிடுகின்றது. சோடியம் குளோரைட் (கறியுப்பு)னால் பயிர் வளர்ச்சித் தன்மை சற்றேனும் கிடையாது. அடுத்ததாக உரங்களைப் பற்றி அறிவோம்.

### உரங்களின் உபயோகம்

இவ்வுலகில் உள்ள உயிர் வாழும் பிராணிகளும், பறவைகளும், மனிதரும் எப்படி சுவாசித்து எவ்வகை உணவுகளை உட்கொண்டு நல்ல திடகாத்திரமாக வாழ முயற்சிக்கிறார்களோ அதேபோல் தான் தாவரங்களுக்கும் மிக மிக முக்கியமாகின்றது. நிலத்தின் தன்மையை அறிந்து எரு இடல் வேண்டும்.

எருவில் இயற்கை அங்கைப் பொருள்கள் உண்டு. அடர்வான செயற்கை அங்கைப் பொருள்கள் உள்ள பசளைகளைத் தான் நாம் உரம் என்று கூறுகிறோம், உரத்தில் தனிப்பட்ட அல்லது இரண்டு பயிரசிப் பொருள்களுண்டு.

கூட்டெரு தயாரிக்கக் காரணம் பலவுள, மாட்டெரு நமது தேவைக்குக் காணாமல் இருப்பதாலும் நமது இருப்பிடங்களில் இருக்கும் குப்பை, கூளம், சாம்பல் யாவற்றையும் வீண் போக விடாமல் இருப்பதற்கு உதவுகிறது. இலை மட்டுமின்றி எரு, காய்ந்த புல், ஆடு, மாடு நிற்குமிடத்து மண் முதலியவற்றையும் குழியில் போட்டு கூட்டெருவாக உபயோகிக்கலாம்.

விளைச்சலை அதிகம் பெருக்கும் இன்றியமையாத தன்மங்கள்:

இப்பிரிவில் காலசியம், பாஸ்பரஅமிலம், பொற்றாசியம் அல்லது சாம்பல் காரச்சத்துகள் அடங்கியுள்ளன.

இயற்கையில் பரந்து கிடக்கும் முக்கிய மண்மங்கள்:

கரி நீரகம், உயிரியம் ஆதியன இவைகளை மரங்கள் அல்லது செடிகள் ஆகாயத்தில் இருந்தும் நீரிலிருந்தும் பெறுகின்றன.

சிறிதளவு தேவைப்படுவனவும் இயற்கையில் பூமியில் கிடைப்பனவுமான தன்மங்கள்:

இப்பிரிவில் கல்சியம், மக்னீசியம், கந்தகம், இரும்பு, மாங்கனீசம், துத்தநாகம், செம்பு மற்றும் மொலிபிடினம் போன்றவைகள் அடங்கியுள்ளன.

நாம் சாதாரணமாக உண்ணும் உணவில் நன்மைகள் பற்றியும் அவற்றின் அவசியம் பற்றியும் அடுத்த கட்டுரையில் அறிவோம்.

(தொடரும்)

# பட்... படார்...

நீதிபதி: நீ திருடியது உன் மைதானே?

திருடன்: அப்படியென்றும் நடக்கவில்லை ஐயா, அப்புறம் நின்ற சயிக்கிளை தூக்கிக்கிட்டு ஓடினேன் அவ்வளவுதான்?

நீதிபதி: ......!!

— த. சிவநாதன்.
கரணவாய்.

•

நீதிபதி: நீ குற்றவாளி என்பதை ஒப்புக்கொள்ளுகிறாயா?

எதிரி: குற்றம் நிரூபிக்கப் பட்டால் ஒப்புக்கொள்வேன்.

ஃ ஃ ஃ

ஆசிரியர்: இந்தப் பாம்புகள் இலங்கையின் எந்தப் பகுதியில் காணப்படுகின்றன.

மாணவன்: ஆபிரிக்காவின் தென்பகுதியில்.

ஆசிரியர்: !!!

ஃ ஃ ஃ

சிறுவன்: பார்க்குக்குப் போட்டு வருகிறேன் அம்மா.

தாயார்: இப்போது பார்க்கு அவசரமில்லை இருக்கிறது போதும்.

சிறுவன்: !!!

—குமார்சந்திரன்,
நல்லூர்.

•

யோகம், என்ன மோகன் ஒரு மாதமாக 'முனைக்கு வேலை' வெளிவரவில்லையே?

மோகன்: ஏன்? அது வராத காரணம் என்ன என்று யோசித்ததே என் மூளைக்கு வேலையாகிவிட்டது!

ஃ ஃ ஃ

(இரசாயன) ஆசிரியர்: புதிய ஐம்பது சத நாணயத்திற்கும் ஒரு ரூபாய்க்குத்திக்கும் என்ன வேறுபாடு.

ரவி: ஒரு ரூபாய் என்றிருப்பது ஒரு ரூபாய், மற்றது ஐம்பது சத நாணயம்.

ஃ ஃ ஃ

ஒருசாரரார்: எங்கே இங்குள்ள பூச்சிகளை காணவில்லை?

மற்றச்சாரார்: பூச்சிகளை எல்லாம் பையன்கள் மீன்பிடிக்க எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள்.

ஃ ஃ ஃ

ஆசிரியர்: நேற்று ஏன் நீ மதுக்கடையில் நின்றாய்?

கோபு: மதுவால் விளையும் கேடுபற்றி எழுதச் சொன்னீர்கள் அதுதான் அங்கு என்ன நடக்குதென்று பார்த்தேன்!

திருடன்: ஏனப்பா போன நீ திரும்பி வருகிறாய்? ஆட்கள் முழித்து இருக்கிறார்களா?

மற்ற திருடன்: ஆட்கள் முழிக்கவில்லை அங்கு இருக்கும் நாய்தான் முழித்துக்கொண்டு இருக்குது!!!

ஃ ஃ ஃ

ஆசிரியர்: திருடன் வந்தான் இது என்ன காலம்?

மாணவன்: இராக்காலம் சார்!!!

-மா. சேவியர் பெர்னாண்டோ,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

•

ஒருவர்: "நீங்கள் யாருக்கு வோட்டு போட்டீர்கள்?

பெரியவர்: ஏதோ மூன்று சின்னமும் சொல்லி சின்னப் மூன்றுக்கும் புள்ளடி போட்டேன்,

ஃ ஃ ஃ

வேட்பாளர்: உங்கள் வாக்குரிமை யாருக்கு?

வீட்டுக்காரர்: எனது வாய்க்கு உரிமை கொடுப்பவனே மனைவி அவளிடம் தான் கேட்க வேண்டும்.

ஃ ஃ ஃ

பையன்: அம்மா அறுபத்தைந்து சதம் தாருங்கள்?

அம்மா: ஏன் உனக்கு.

பையன்: ஆயிரம் ரூபாய் பார்க்க,

—எம். புஷ்பராணி
பெர்னாண்டோ,
சின்னக்கடை,
மன்னார்.

## 'முனைக்கு வேலை'

கடந்த வாரம் வெளியான 'முனைக்கு வேலை' பகுதிக்கு ஏராளமானவர்கள் விடையெழுதியிருக்கின்றனர். கடந்த சனிக்கிழமை விடை அனுப்பும் கடைசித்தினமாகும். ஆனால் அன்று விடுமுறையாக இருந்ததால் ஏராளமான விடைகள் நேற்றுத் தான் வந்தன, இதன் காரணமாக விடைகளைத் தரம் பிரிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுவிட்டது. சரியான விடையும் உங்களின் பெயர்களும் அடுத்த வார மாணவர் மலரில் வெளியாகும்.

—சாந்தா

## நாட்டுப் பாடல்கள்

— திரு —

மக்களின் மனநிலையை பாடல் மூலம் வெளிப்படுத்துவன நாட்டுப் பாடல்கள். மக்களின் சாவாந்த வாழ்க்கையில் ஏற்படும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளில் இடம்பெறுவன நாட்டுப் பாடல்கள். சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு அமைந்திருக்கும் இப்பாடல்கள் பலவகைகளில் சுவை தருகின்றன.

அழுதுகொண்டிருக்கும் மகவைத் தேற்ற அன்னை பாடுகிறாள், வயலில் உழுது களைத்த உழவன் நாட்டுப்பாடல் மூலம் தனது களை நீங்கப். பெறுகிறான், கிராமப் பெண்கள் தமது சோகத்தை ஒப்பாரி மூலம் வெளிப்படுத்துகின்றனர். இவ்வாறு நாட்டுப் பாடல்கள் மனிதனின் இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் இடம் பெறுகிறது.

நாடு செழிப்புற கடவுள் அருளை நாடும் பாடல், பக்தியை வெளிப்படுத்துகிறது. 'நல்ல மழை பெய்யவேண்டும் பிள்ளையாரே?, நாடெல்லாம் செழிக்க வேண்டும் பிள்ளையாரே, பட்டி பெருக வேண்டும் பிள்ளையாரே!, பால் பானை பொங்க வேண்டும் பிள்ளையாரே!'

நாட்டுப் பாடல்கள் கற்றோருக்கு மட்டுமன்றிப் பாமர மக்களுக்கும் விளங்கக்கூடிய தாகவும். மக்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவன வாகவும் அமைந்து விளங்குகின்றன.

## விஞ்ஞானிக்கும் மறதி உண்டு

— அ. கனகசூரியர் —

சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உண்டு என்பதையும், பூமிக்கு ஈர்ப்புச்சக்தி உண்டு என்பதையும் கண்டுபிடித்த சேர் ஐசாக் நியூட்டன் மறதிக்காரரும்கூட.

ஒரு நாள் நியூட்டனைப் பார்ப்பதற்காக அவரது நண்பரொருவர் சென்றார். அறையில் நியூட்டனைக் காணவில்லை. அங்கிருந்த மேசையொன்றில் அவரின் சாப்பாடு வைக்கப் பட்டிருந்தது. அந்த நண்பர் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு சென்றுவிட்டார், சிறிது நேரத்தில் சாப்பிடுவதற்காக வந்த நியூட்டன் அங்கு உணவு மிச்சங்கள் இருக்கக் கண்டு 'அட நான் சாப்பிடவில்லை என்றிருந்தேன். இங்கே சாப்பிட்ட மிச்சங்கள் இருக்கின்றனவே' என்று சொல்லிவிட்டு ஆய்வு கூடத்திற்குச் சென்றுவிட்டார் நியூட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடாந்த திருநாள்

கல்முனை, திங்கள்

மட்டக்களப்பு தேற்றாத்தீவு அர்ச். யூதாததேயு ஆலயத்தின் வருடாந்த திருநாள் வைபவங்கள் இம்மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமைகொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியுள்ளது. நாள்தோறும் நவநாள் ஆசீர்வாதம் பூஜை ஆகியன நடைபெறுகின்றன. சனிக்கிழமை பிற்பகல் சற்றுப்பிரகாரமும் பாடல்பூசையும் இடம்பெற்றன. ஞாயிற்றுக்கிழமை காலை திருக்கோணமலை மேற்றிராணியாரால் பாடல்பூசை நடத்தப்படும் திருநாள் முற்றுப்பெற்றன.

## வானொலி நிகழ்ச்சிகள்

### செவ்வாய் 4-5-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00.)

காலை 6-45 உதயகீதங்கள், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-45 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 தரை காணம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரைப்படஇசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஸ்ரீலங்கா குறுக்கெழுத்துப் போட்டி, 7-00 வயலின் — வி. சோமசுந்தரம், 7-30 விவேகச்சக்கரம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 கேயர்விருப்பம், 9-45 நாதஸ்வரம்,


REGAL – JAFFNA
NOW SHOWING
Jack Palance
in
REVAK THE REBEL
(Technicolor)
Next Change:- TARAS BULBA


## "குடிசைத் தொழிலை ஆரம்பியுங்கள்"

பருத்தித்துறை, திங்கள்

கிராமப்புறங்களில் கிடைக்கும் மூலம் பொருள்களைக் கொண்டு சிறிய அளவிலான குடிசைத் தொழில்களை மேற்கொள்ள கிராம அபிவிருத்தி நிலையங்கள் முயல வேண்டும் இதனால் பலருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுவதுடன் பொருளாதார விருத்தியும் உண்டாகும்.


இவ்வாறு கிராம முன்னேற்றச் சங்க மேற்பார்வை அதிகாரி திரு. கே. என். பி. நவரத்தினராசா நாகர் கோவில் குடாரப்பு கிராம முன்னேற்றச்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

குடாரப்புப்பகுதி மாணவர்களின் கல்வி வசதியை முன்னிட்டு ஓர் ஆரம்பபாடசாலையை அங்கு ஸ்தாபிக்கவேண்டுமெனவும், கயிற்றுத் தொழிற்சாலையொன்றை நிறுவுவதுடன் வெங்காயக்கூடை பின்னும் பயிற்சியளிக்க ஆசிரியை ஒருவரைத்தந்துதவ வேண்டுமெனவும் தொடர்புடைய அதிகாரிகளைக்கேட்டுக் கொள்ளும் தீர்மானங்களை நிறைவேற்றியதுடன் குடாரப்பிக்கு பஸ்சேவை ஒன்றை விஸ்தரிக்க இ. போ. ச. பிராந்திய முகாமையைக் கோருவதெனவும் முடிவுகள் செய்யப்பட்டன.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு மு. ச. வல்லிபுரம், உப-தலைவர்: திரு நா. மயில்வாகனம், காரியதரிசி:- திரு. கோ. இரத்தினசிங்கம், உப-காரியதரிசி: திரு. செ. அரியரத்தினம், தனதிகாரி:- திரு. க. குமாரசாமி.


சிங்ஸி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) ராஜ் (கொழும்பு)
லக்ஷ்மி (ரத்னபுரி) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)
விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரேலியா) ஜூப்பிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்


கரப்பந்தாட்டப் போட்டி

## சாவகச்சேரி, கட்டைப்பிராய் கோஷ்டிகள் வெற்றி!

மீசாலை, திங்கள்

யாழ்ப்பாணம் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் "ஏ" பிரிவுகளின் இறுதிப் போட்டியில் கட்டைப்பிராய் கலைவாணி விளையாட்டுக் கழகமும், "பி" பிரிவுகளின் இறுதிப் போட்டியில் சாவகச்சேரி மத்திய விளையாட்டு கழகமும் வெற்றி பெற்றன.

கட்டைப்பிராய் கலைவாணி கழக 'ஏ' பிரிவுக்கும், அரியாலை விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவுக்கும் நடைபெற்ற போட்டியில் 2-1 புள்ளிகளால் கட்டைப்பிராய் கலைவாணி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழக 'பி' பிரிவுக்கும் கட்டைப்பிராய் கலைவாணி விளையாட்டுக்கழக 'பி' பிரிவுக்கும் நடைபெற்ற போட்டியில் 2-0 புள்ளிகளால் சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழக 'பி' பிரிவு கோஷ்டி வெற்றி பெற்றது.

கட்டைப்பிராய் ஏ பிரிவு கோஷ்டியில், குணபாலசிங்கமும், சுப்பிரமணியமும் திறமையாக விளையாடினர்கள். சாவகச்சேரி மத்திய விளையாட்டுகழக பி பிரிவு கோஷ்டியில் ஏ. ராஜேந்திரனும், எஸ். துரைசாமியும் திறமையாக விளையாடிப் பாராட்டைப் பெற்றர்கள்.

சாவகச்சேரி மத்திய விளையாட்டு சழகத்தின் சார்பில் நடைபெற்ற இக்கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஏ பிரிவில் வெற்றி பெற்ற கட்டைப்பிராய் கோஷ்டிக்கு பொன்னுச்சாமி ஞாபகார்த்த கேடயம் வழங்கப்பட்டது. பி பிரிவில் வெற்றி பெற்ற சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழகத்துக்கு சாவகச்சேரி நகரசபை அன்பளிப்பு கேடயமும் வழங்கப் பட்டது. திறமையாக விளையாடியவர்களுக்கும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப் பட்டன.

சாவகச்சேரி மத்திய விளையாட்டு கழக மைதானத்தில் இக்கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நடைபெற்றது. இறுதிப் போட்டி சாவகச்சேரி நகரசபை தலைவர் திரு. ஆர்டி. சிவகுரு தலைமையில் நடைபெற்றது சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம், இக்கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்கு பற்றியவர்களை பாராட்டி பேசினர். திருமதி நவரத்தினம் பரிசில்களை வழங்கினர். திரு. வி. வைத்திலிங்கம் நன்றியுரை கூறினர்.

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், செவ்,

யாழ்ப்பாணம் மென்பந்து கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மூன்று போட்டிகள் இங்கு நடைபெற்றன.

### 'யங்லயன்ஸ்' வெற்றி

"ஏ" குரூப்பில், யங்லயன்ஸ் விளையாட்டுக் கோஷ்டிக்கும் "லயன் ஆட்" விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் யங்லயன்ஸ் கோஷ்டி ஒரு இன்னிங்ஸ் 30 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. லயன் ஆட் முதல் இன்னிங்ஸில் 54 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 07 ஓட்டங்கள் எடுத்தது. யங்லயன்ஸ் தனது முதல் இன்னிங்ஸில் 91 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

### 'கென்னடி' வெற்றி

"பி" குரூப்பில் கென்னடி ஞாபக விளையாட்டுக் கழகத்துக்கும், சென். ஜோசப் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற போட்டியில் கென்னடி ஞாபக விளையாட்டுக் கழகம் ஒரு இன்னிங்ஸாலும் 41 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது. கென்னடி தனது முதல் இன்னிங்ஸில் 98 ஓட்டங்கள் எடுத்தது. சென். ஜோசப் தனது முதல் இன்னிங்ஸில் 07 ஓட்டங்களும் இரண்டாவது இன்னிங்ஸில் 50 ஓட்டங்களும் எடுத்தது.

'ஸி' குரூப்பில், ஓ. எல். ஆர். விளையாட்டுக் கழகத்துக்கும் யங் டைகர்ஸுக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சில பிரச்னைகளைத் தொடர்ந்து வெற்றி தோல்வி முடிவுகள் உடனடியாக அறிவிக்கப்படவில்லை. இதனை விளையாட்டுச் சங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

## ஏல விற்பனை

இத்தால் தெரிவிப்பது கைதடி வல்லியா வளவில் அடைவுபிடிக்கும் பொன்னம்பலம் வில்வநாதனிடம் 1963ம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி தொடக்கம் 1964ம் ஆண்டு சித்திரை மாசம் 30ம் திகதி வரைக்கும் மீட்கப்படாத அடைவுபொருள்களையும் கூடுதலாகப் பணம்பெற்றுப் பெறுமதியில்லாதிருக்கும் அடைவுப் பொருள்களையும் வெந்தீலில் விற்கப்படும். மீட்பவர்கள் 30-5-65க்குள் மீட்டுக் கொள்ளவும்.

இப்படிக்கு,

155 பொ. வில்வநாதன்

## கல்வி நிலையம்

பின்வரும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. (1) கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்புக்குரிய எல்லாப் பாடங்களும், (2) உயர்தரவகுப்புக்குரிய எல்லாப் பாடங்களும், (3) வர்த்தகக் கல்விக்குரிய பாடங்கள், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகக்கணிதம், (4) கலைத்தேர்வுகாண் பரீட்சை: சமஸ்கிருதம, தமிழ், பொருளியல், இந்திய சரித்திரம், ஐரோப்பிய சரித்திரம், (5) மொழிக் கல்வி: தமிழ், சமஸ்கிருதம், பாளி, ஆங்கிலம், சிங்களம் தனித்தனியாகவும் கற்க வசதியளிக்கப்படும். வேறு பள்ளிக்கூடங்களிற் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு மாலையிலும், மற்றையோருக்குக் காலையிலும் வகுப்புக்கள் நடாத்தப்படும். பெண்பிள்ளைகளுக்கும் விடுதி வசதி உண்டு. 43, மூன்றாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 223

### தேவை

4 வருட அனுபவமுள்ள சினிமா ஒப்பறேற்றர் தேவை, 35 வயதுக்குட்பட்டவரும் 250/- ரூபாய் பிணைப்பணம் கட்டக்கூடிய விண்ணப்பகாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிமையாளர், ஸ்ரீ பாஸ்கரன் தியேட்டர், அச்சுவேலி. 228

### விற்பனைக்கு

காணி பரப்பு விஸ்தீரணமுள்ள காணி, கிணறு ஒழுங்கையிலிருக்கும் பாரதி வீதியில் விற்பனைக்குண்டு விபரத்திற்கு 316, காவலர் வீதியிலுள்ளவர்களை விசாரணைசெய்யவும். 219

### கல்வி

சகல பாடங்களும் (விஞ்ஞானம், கலை, வர்த்தகம்) ஆங்கிலமொழியில் படிக்க விரும்பினால் விண்ணப்பிக்கவும் மா. புவனேந்திரன், வர்த்தகக்கல்வி நிலையம். திருநெல்வேலி. 95

### வகுப்புகள்

மத்திய எழுதுவினைஞர் - அப்போதிக்கரி புகுமுக பரீட்சைகளுக்கு ஆர்வமிருந்த மீட்டல் வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, யூனிவெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி, 107, பருத்தித்துறை றோட், நல்லூர், யாழ்ப்பாணம். 208

தொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலும், மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

## நாவுக்கரசர் குருபூசை

யாழ்ப்பாணம், செவ்

அராலி இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் திருநாவுக்கரசர் குருபூசைத் தினம் சென்றவாரத்தில் நடைபெற்றது. சங்கீத ஞாயிறு பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் திருவாளர்கள் நா. தங்கத்துரை, வே சிவசுப்பிரமணியம், வே. நவரத்தினம், அ. வேலாயுதர், க. நடராசா ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.


அதிக இலாபமடையுங்கள்

உங்கள் கால் நடைகளுக்கு, முற்றிலும் புதிய, பூரணமாக சமன் செய்த, உயர்ந்த போஷாக்குடைய தீனை

ஹைவிட்டா மீல்

ஊட்டுங்கள்

இது உங்கள் கோழிகளுக்கு ஊட்ட உகந்த அதியுன்னத கலவையுமாகும்.

ஹைவிட்டா உற்பத்திப் பொருட்கள், ஜா-எல [illegible]

டெலிபோன்: ஜா-எலை-216. கொழும்பு-[illegible]

# 'நீ யார்?' என்று கேட்டு குத்தினர்

## மீசாலை கொலைவழக்கில் சாட்சியம்

சாவகச்சேரி, சனி

மீசாலை கொலைவழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோட்டில் நீதிபதி திரு. ஜெுபேட் சில்வா முன்னிலையில் முதல் தடவையாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது முதலாவது சாட்சியாக டாக்டர் கல்லையா சாட்சியமளித்தார். அடுத்து கொலையுண்டவரின் மச்சான் சின்னத் தம்பி திருநாவுக்கரசு சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் மீசாலையில் வேலை மாணிக்கம் என்பவரைக் கொலை செய்ததாக அவரது [illegible] மேலன் பொன்னையா மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் திருவாளர்கள் செல்லத்தம்பி, என் நடராசா, [illegible] ஆகியோர் ஆஜராகினர். [illegible] ஆஜரானர்.

திருநாவுக்கரசு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"கொலையுண்ட மாணிக்கம் எனது மச்சான், எதிரி கொலையுண்டவரின் சகோதரன். சம்பவம் நடந்த அன்று நான் எனது ஊரான கரணவாய்க்குப் போவதற்காக மீசாலையை நின்றும் இடத்திற்கு வந்தேன். என்னை வழி அனுப்புவதற்காக மாணிக்கமும் சைக்கிளில் வந்தார் வழியில் அவர் தனது தம்பி பொன்னையா பாலைகளையும் முட்டிகளையும் இறக்கிக்கொண்டு தனது ஊரான அல்வாய்க்குப் போகப்போவதாகவும் அவரைப் போகாது தடுக்கவேண்டும் என்றும் கூறி என்னையும் வரும்படி கேட்டார் நானும் சம்மதப்பட்டு அவருடன் மீசாலை மாவடிப்பிள்ளையார் கோவில் ஒழுங்கையால் சென்றேன் வழியில் வேலுப்பிள்ளை ஐயரின் வளவிற்கு முன்னால் முட்டிகள் வைக்கப்பட்டிருந்தன நாங்கள் எதிரி நின்ற அந்தப் பனைவளவிற்குப் போனோம் அங்கே எதிரியுடன் சபாபதியும், செல்லத்தம்பியும் நின்றார்கள் மாணிக்கம் எதிரியிடம் "ஏன் முட்டிகளை இறக்குகிறாய்" என்று கேட்டார் அதற்கு எதிரி "நீ யார் அதைக்கேட்க!" என்று கேட்டுக்கொண்டு தன்னிடமிருந்த கத்தியை எடுத்து மாணிக்கத்தின் மேல் துடையில் குத்தினர் உடனே அங்கு நின்ற மற்றைய இருவரும் எதிரியை அந்த இடத்திலிருந்து இழுத்துச் சென்றனர் நான் மாணிக்கத்தை இரு கைகளாலும் தூக்கிக்கொண்டு பிரதான வீதியை நோக்கிவந்தேன் அப்பொழுது சாவகச்சேரியிலிருந்து மீசாலை நோக்கி வந்துகொண்டிருந்த சின்னத்துரை என்பவரின் காரை மறித்து அதில் மாணிக்கத்தை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்ல ஏற்றினேன் ஆசிரியர் துரைசாமியும் மாணிக்கத்தைக் காரில் ஏற்ற உதவிபுரிந்தார் நானும் மாணிக்கத்தின் சகோதரி செகலம்மாவும் மாணிக்கத்துடன் காரில் போனோம் வழியில் மாணிக்கம் இறந்துவிட்டார்"

எதிரியின் வழக்கறிஞர் திரு கண்ணுத்துரை குறுக்குவிசாரணை செய்தார் மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது

# 'தொழிலாளருக்கு உரிய இடம் அளிக்கப்படும்'

## மேதின கூட்டத்தில் பிரதமர் உறுதி

கொழும்பு, ஞாயிறு

'முந்திய அரசாங்கங்கள், தொழிலாளர்களுக்கு அவர்களுக்குரிய இடம் அளிக்கவில்லை, தேசிய அரசாங்கம் தொழிலாளர்களுக்கு உரிய இடத்தை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளும்'

இவ்வாறு கொழும்பில் தில் தேசிய அரசாங்கசார்பாக நடைபெற்ற மேதினவிழாவில் பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா பேச்சையில் குறிப்பிட்டார்

பிரதமர் மேலும் பேசுகையில் தொழிலாளர்கள் நாட்டின் முதுகெலும்பு என்றும் அவர்கள் தமது உன்னத பொறுப்பை உணர்ந்து தவறனவழியில் செல்லாது நாட்டுநலன்கருதி உழைக்க வேண்டும் என்றார்

கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு பிலிப்குணவர்த்தன பேச்சையில் கூறியதாவது-

தொழிலாளர்கள் சுயநலவாதிகளின் வலையில் சிக்காதிருக்கவேண்டும் தொழிலாளர்கள் நிதான புத்தியுடன் நடந்துகொண்டால்தான் அவர்களுக்கும் நாட்டுக்கும்நன்மையளிப்பதாக இருக்கும் உள்நாட்டு உற்பத்தியை அபிவிருத்தி செய்யதொழிலாளர்கள் உழைக்கவேண்டும் இவ்வாறு உழைப்பதால்தான் பொருள்களின் விலை உயர்வைத் தடுக்கலாம்

வேமன அங்கத்தவர் திரு தொண்டமான் பேச்சையில் தொழிலாளர்களின்தேவையை நாடு இப்போதுதான் நன்கு உணர்ந்துள்ளது என்றும் தொழிலாளரின் நலனைப் பாதுகாக்க ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமென்றும் குறிப்பிட்டார்

---

# தனிச்சிங்கள சட்டம் பற்றி மந்திரி திருச்செல்வத்தின் பேச்சு

## தமிழ்க்காங்கிரஸ் நிர்வாகசபை கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள்

தனிச்சிங்களச் சட்டத்தைப் பற்றியும், தமிழ்மொழியின் அந்தஸ்தைப் பற்றியும் மாவட்டசபைகள் நிறுவுவதற்குரிய சட்டதிட்டங்கள் பற்றியும் அரசாங்க பாராளுமன்ற சபைக்குழுவோ மந்திரிசபையோ ஆராய்ந்து முடிவு செய்யமுன்னர் இவ்விஷயங்கள் பற்றி செனட்டர் எம். திருச்செல்வம் மேற்சபையில் பேசியதை நேற்று யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழ்க் காங்கிரஸ் நிர்வாகசபை வன்மையாகக் கண்டித்தது.

யாழ்ப்பாணம் உயர்கலை மன்ற மண்டபத்தில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது

"[illegible] சிங்களச் சட்டத்தை தங்கள் கட்சி ஏற்றுவிட்டதென்றும் சிங்களவரே இந்நாட்டின் பெரும்பான்மையினராக இருப்பதால் அரசாங்க மொழியாக சிங்களமே இருக்க வேண்டுமென்றும் சிங்கள மக்களது கோரிக்கை முழுவதும் சரியானதென்றும் தங்கள் கட்சி அதனை ஏற்றுக்கொள்கிறதென்றும் மேற்சபையில் திரு திருச்செல்வம் பேசிய பேச்சு யார் சார்பில் நிகழ்த்தப்பட்டது? மந்திரிசபை சார்பாகவோ? அல்லது அரசாங்க பாராளுமன்ற குழுசார்பாகவோ? அல்லது சமஷ்டிக் கட்சியின் சார்பாகவோ? அல்லது அவரின் தனிப்பட்ட சார்பாகவோ? அவ்வாறு அவர் கொள்கை விளக்கம் செய்ய அவருக்கு யார் அதிகாரம் கொடுத்தனர்?" என்றும் நிர்வாகசபை மேலும் கண்டனம் தெரிவித்தது

திரு பொன்னம்பலத்தினது மொழிக்கொள்கை குறித்து திரிதுப் பிழையாகத் திரு திருச்செல்வம் குறிப்பிட்டதையும் வன்மையாகக் கண்டித்தனர்

மொழிப்பிரச்னையை கட்சி விதிதியாசத்திற்கு அப்பால் உயர்த்தி ஒரு வட்டமேசை [illegible] கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது

இலங்கையின் [illegible]
[illegible] சிவலிங்கனின் [illegible] இருந்து
[illegible] 1965 [illegible] மே
[illegible] அவசியமென வலியுறுத்தப்பட்டது,

---

# கார் அன்பளிப்பு

நல்லூர், ஞாயிறு

நல்லூர்த் தொகுதி அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ் வாலிபமுன்னணியின் முயற்சியால் சேர்க்கப்பட்ட பணத்தைக்கொண்டு வாங்கிய கார் ஒன்று இன்றையதினம் நடைபெற்ற வாலிபமுன்னணி கூட்டத்தின் அத்தொகுதியில் போட்டியிட்ட திரு. சி. அருணம்பலத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது

# விலகவில்லை

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழரசுக்கட்சியிலிருந்து தாம் விலகிவிட்டதாக வெளிவந்தசெய்தி தவறானதென்று தமிழரசுகட்சியின் உதவிச்செயலாளர் திரு க பத்மநாதன் தெரிவித்துள்ளார்

# காணிவரி அதிகரிப்பு

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ள காணிகளுக்கு அறவிடப்படும் வரி, நடப்பு வருடத்திலிருந்து அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த எல்லைக்குள் இருக்கின்ற ஆதனங்களின் கடைசியாக எடுக்கப்பட்ட மதிப்புகள் மிகவும் அதிகமாக இருப்பதும் 1964ம் வருடம்வரை 7 விதமாயிருந்த ஆதனவரியைக் குறுகியகாலத்தில் 10 விதமாக அதிகரித்தமையுமே இந்த வரி அதிகரிப்புக்குக் காரணமென்று தெரிகிறது.

இந்த வரியதிகரிப்பு நியாயமற்றதென்று பலர் நகரசபைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதுகாரணமாக ஆதன அமைப்பு திருத்தியமைப்பதை ஆராய நகரசபை அங்கத்தவர்களின் விசேஷ கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறு நகரசபை அங்கத்தவர்கள் திருவாளர்கள் க. கா. தர்மலிங்கம், க. பாலசுப்பிரமணியம், க. கனகரத்தினம், வை. தர்மலிங்கம், கந்தையா சிவம் ஆகிய ஐயவரும் நகரசபைத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# தஞ்சை பிரகதீசர் ஆலயம்

தஞ்சாவூர், மே 2

நல்ல வருமானம் உள்ள கோயில்கள் இதரகோவில்களை புதுப்பிக்கும் வேலையில் உதவ வேண்டும் என முதன்மந்திரி திரு பக்தவத்சலம் யோசனை கூறியிருக்கிறார்

தஞ்சாவூரிலுள்ள பிரகதீஸ்வரர் ஆலயப் புனருத்தாரண வேலையை ஆரம்பித்துவைத்துப் பேசியபோது இவ்வாறு அவர் கூறினர் ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயம் 1000 ஆண்டுகளுக்கு முன் ராஜராஜசோழனால் கட்டப்பட்டது

# மனேஜர் மீது மோசடி குற்றச்சாட்டு

குருநாகல், திங்கள்

ஒரு திடீர் பரிசோதனை நடாத்திய போழுது கட்டுப்பிட்டிய பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் 7084 ரூபா 86 சதம் குறைவாகக் காணப்பட்டது.

இதைத் தொடர்ந்து குருநாகல் பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் செல்வராஜா தொடர்ந்து நடாத்திய விசாரணையின் விளைவாக சங்க மனேஜரின்மேல் பணத்தை மோசடி செய்ததாகவும், சங்கத் தலைவர் இதற்கு ஆதரவும் ஒத்தாசையும் கொடுத்ததாக குற்றஞ்சாட்டி வழக்கு தொடரப்பட்டுள்ளது,

குருநாகல் மாஜிஸ்ரேட் திரு. அசோக குணவர்தன விசாரணை நடாத்திய பின்னர் வழக்கை மறுவிசாரணைக்காக மே மாதம் 19-ந் திகதிக்கு பின்போட்டுள்ளார்.

# நாவற்குழி கொலை வழக்கு

சாவகச்சேரி, திங்கள்

நாவற்குழி கொலை வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ஜெுபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது மூன்று சாட்சியமளித்த கட்டையடுத்து எதிரிகளின் வழக்கறிஞர் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்தார் மேலுமிலரும் சாட்சியமளித்தபின் நீதிபதி வழக்கை இம்மாதம் 10-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் நாவற்குழியைச் சேர்ந்த தம்பிஐயா என்பவரை கொலை செய்ததாக முத்து அப்புத்துரை, அப்புத்துரை சிவராசா இருவர் [illegible] தும் சாவகச்சேரிப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது,

எதிரிகள் சார்பில் திரு. இ. ட. சிவகுருவின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. சி கணேசலிங்கம் ஆஜரானர். சாவகச்சேரி பொலிஸ சப் இன்ஸ்பெக்டர் திரு. தேவசகாயம் வழக்கை நடாத்தினர்.

# இரத்த தானம் :.:

(1ம்-பக்க தொடர்ச்சி)

லேயே முதன்முறையாக இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டதென்றும் அவ்வூர் இளைஞர்கள் இரத்ததானம் செய்வதில் உற்சாகமாக முன்னின்றமை மகிழ்ச்சிக்குரியதென்றும், இதுபோன்று மற்றும் இளைஞர்களும் இரத்ததானம் செய்ய முன்வருவதால் ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தமில்லாப் பிரச்னை தீர்ந்துவிடுமெனத் தான் நம்புவதாகவும் குழுவின் தலைவர் டாக்டர் ஜோசெப் தெரிவித்தார்.

இக்குழுவினர் இந்தவாரத்தில புங்குடுதீவுக்கு விஜயஞ்செய்து இரத்தம் சேகரிப்பார்கள் என்றும் பல கிராமங்களுக்கும் செல்வார்கள் எனவும் இக்குழுவைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

---

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிபர் காரியாலயத்திலிருந்து சுகாதார பரிசோதகர்கள் திருவாளர்கள் வி. சண்முகவடிவேலு, கே. இரத்தினம், எம். சின்னத்துரை, எல. குமாரசாமி ஆகியோர் முறையே ஆண்டியம்பலம், கம்மடுவ, நீர்கொழும்பு, அராலி ஆகிய இடங்களுக்கும் சிரேஷ்ட சுகாதாரபரிசோதகர் திரு. கி. இராசசிங்கம் தெல்லிப்பழைக்கும் இடமாற்றம்பெற்றுச் செல்வதை முன்னிட்டு உடன் ஊழியர்கள் பிரிவுபசார விருந்தொன்று அளித்துக் கௌரவித்தனர்.

# இன்று

இணுவில் கந்தசுவாமி கோவில் மூலஸ்தான புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கான அந்திவாரக்கல் நாட்டுவிழா இன்று நடைபெறும். இவ்விழாவில் சைவப்பெரியார்கள் பலர் கலந்துகொள்வார்கள்,

# திருட முயற்சி

சாவகச்சேரி, திங்கள்

கைதடி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க சமாசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை 12 வயதுச் சிறுவன் ஒருவன் பொருட்களைத் திருட முயற்சித்ததாக சாவகச்சேரிப் பொலிசாரிடம் ஒப்புவிக்கப்பட்டான்.

# தொழிலாளர் நலனுக்கு உழைக்கும்

காலி, செவ்வாய்

இடதுசாரிகள் தொழிலாளர்களை ஏமாற்றிவிட்டார்கள். சமசமாஜ மந்திரிகள் தொழிலாளர்களின் 21 கோரிக்கையில் ஒன்றையாவது கொடுக்கவில்லை, இத்தக கோரிக்கைகள் தேசிய அரசாங்கத்திடமும் சமர்ப்பித்தால் அவற்றில் பெரும்பாலனவற்றை கொடுப்பதற்கு தேசிய அரசாங்கம் ஆயத்தமாகவுள்ளது என்று உள்நாட்டு மந்திரி டாக்டர் தகநாயக்கா தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரம் ஒன்றுக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் தெரிவித்தார். தேசிய அரசாங்கம்தொழிலாளர் நலன் கருதித்தொண்டாற்றும் எனவும் அவர் தெரிவித்தார்.

# 'சேவைதான் முக்கியம்'

வெலிகம, திங்கள்

'நான் உங்கள் ஊழியனே யல்லாமல் மந்திரியல்ல. நாங்கள் பணக்காரர்களாகவேண்டும் என்ற நோக்கில் தேர்தலில் போட்டியிடவில்லை, மக்களுக்கு சேவை செய்வதற்காகவே நாம் முன்வந்துள்ளோம்' என்று தபால் மந்திரி திரு. மொன்டேகு ஜெயவிக்கிரமா தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்

# மாணவர்சங்க நிர்வாகிகள்

பருத்தித்துறை, திங்கள்

புலோலி ஆண்கள் கல்லூரி (வேலாயுதர்பாடசாலை) பழைய மாணவர்சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் கல்லூரித் தலைவர் திரு. எம். ஏ தங்கராசா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் சங்க உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். காப்போனர்: த. இராமநாதபிள்ளை. தலைவர் எம். ஏ. தங்கராசா. உப.தலைவர்கள் வி. முருகேசபிள்ளை, வி. கார்த்திகேசு, காரியதரிசி கே. பொன்னம்பலம், உப காரியதரிசி ஆர். சுப்பிரமணியம்; தனாதிகாரி எஸ். லோகநாதன். உப தனாதிகாரி எம். நடராசா.

# தோட்டத்தில் நெருக்கடி

## மனேஜர் ராஜினமா

கொலன்னாவ, திங்கள்

கீட்வூட் தேனிலைத்தோட்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால் அத்தோட்ட மனேஜர் திரு. ஏ சி ரெசப் தனது பதவியிலிருந்து ராஜினமா செய்துள்ளார், இவரது இடத்திற்கு அப்புத்தளை நாகல்லை தோட்ட மனேஜர் திரு. ரத்நாயக்கா பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். நாகல்லைக்கு கொலன்னாவையைச் சேர்ந்த மாகந்தைத் தோட்ட உதவி மனேஜர் திரு. ஹெந்தி எண்டர்சன் மனேஜராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார், திரு. எண்டர்சனின் இடத்திற்கு திரு. வி. சக்திவேல் இடமாற்றம்பெற்றுள்ளார். இவரது முன்னைய இடம் இன்னும் நிரப்பப்படாமலிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org